கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2009/2010
(ஜனவரி 2013) (வெளிவாரி)

LIBRARY 10 JUN 2013 SRI LANKA

## TL 202 Prescribed Text

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

(01) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயராது
இலை புதை பெருங்காட்டுத் தலை கரந்து இருந்த
வல்வில் மறவர் ஒடுக்கம் காணாய்
செல்லல் செல்லல் சிறக்க நின்னுள்ளம்
முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கும் ஆன்மேல்
புடை இலங்கு ஒள்வாள் புனை கழலோயே

(அ) பாடலின் பொருளைத் தெளிவுற எழுதுக.
(ஆ) இப்பாடலின் திணை, துறையைக் குறிப்பிடுக.
(இ) 'முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத் தாவுபு தெறிக்கும் ஆண்' விளக்குக.

(02) கண்ணகி வழக்குரையில் உமக்கு வழங்கப்பட்ட பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்குக.
(அ) கண்ணகியின் குணவியல்பு
(ஆ) நெடுஞ்செழியனின் நீதி முறை

(03) திருச்சாழல், செந்திலாப்பந்து, திருப்பள்ளியெழுச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணிக்க வாசகரின் பக்தி வெளிப்படுத்தப்படுமாற்றை ஆராய்க.

(04) காளமேகப் புலவரின் பாடல்கள் எவ்வகையில் விஜய நகர நாயக்கர்கால இலக்கியப் பண்புகளை வெளிப்படுத்தி நிற்கின்றன? உதாரணங்களுடன் விளக்குக.

(05) பிரிந்த மகவைக்காண் படலத்தினூடாக யேசுநாதரின் புகழ் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(06) "மகாகவி தனது சாதாரண மனிதனது சரித்திரத்தினூடாக அக்கால சமூகத்தின் அவலங்களைச் சித்திரித்துள்ளார்." இக்கூற்றினை மதிப்பிடுக.

(07) செய்னம்பு நாச்சியார் மான்மியம் போலியான சடங்காசாரங்களை அங்கதச் சுவையுடன் தருவதாகும். விளக்குக.

(08) பிச்சமூர்த்தியை தமிழ்ப் புதுக்கவிதையின் முன்னோடி எனக் கூறுவதற்கான காரணங்கள் யாவை? விளக்குக.

***